DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 13/2018 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

Name : திரு.தமிழ்செல்வன்

Father's Name (or)

Husband Name : த/பெ.ராமசாமி

Village : வெளியக்கோட்டை

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 19.01.2023

---

முதல் விசாரணை

1. நான் வெளியக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் எனது மருமகள் ஆவார். எதிரிகள் எனது அண்ணன் மகன்கள் ஆவார்கள். போஸ் எனது அண்ணன் ஆவார். ஜான்சி ராணி எனது அத்தாச்சி ஆவார். பிரியதர்ஷினி எனது

பக்கத்து விடு. கார்மேகம் (எ) சின்ன பெருமாள் எனது மைத்துனர் ஆவார். மாலதி எனது மைத்துனரின் மனைவி ஆவார்.

2. 05.09.2001ம் தேதி 1வது எதிரிக்கும் செல்லம்மாளுக்கும் தேவகோட்டை AT திருமண மஹாலில் திருமணம் நடைபெற்றது. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது. 03.05.2017ம் தேதி நானும் எனது அண்ணன் ஈஸ்வரன் இருவரும் கீழனூர் கிராமத்தில் உள்ள எனது அண்ணன் போஸ் அவர்கள் வீட்டிற்கு சென்றோம்.

3. அங்கு மாலதி மகள் பிரியதர்ஷினிக்கும் சாக்ரடீஸ்க்கும் திருமணம் நடைபெற்றது. தாலி கோர்த்த செயினை பிரியதர்ஷினி கழுத்தில் சாக்ரடீஸ் போட்டார். போஸ், ஜான்ஸிராணி, மாலதி, கார்மேகம் (எ) சின்னபெருமான் ஆகியோர்கள் மாலை அணிவித்தார்கள்.

4. சாக்ரடீஸ் பிரியதர்ஷினி ஆகியோர்கள் மாலை மாற்றிக் கொண்டார்கள். கார்மேகம் (எ) சின்ன பெருமாள் அவர்களுக்கு அட்சதை போட்டார். மேற்படி திருமணம் பற்றி புகார்தாரருக்கு நான் தகவல் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது**